தி இந்து
தமிழால் இணைவோம்

- Jan 8th 2016

# ஆன்லைனில் படிப்பு: சென்னை ஐஐடி அறிவிப்பு

சென்னை ஐஐடி கல்வி நிறுவனம், இதர ஐஐடி-க்கள் மற்றும் ஐஐஎஸ்சி கல்வி நிறுவனங்களுடன் இணைந்து ஆன்லைனில் தொழில்நுட்ப சான்றிதழ் படிப்பை நடத்தி வருகிறது. தேசிய தொழில்நுட்ப மேம்பாடு கல்வி திட்டத்தின் கீழ் நடத்தப்படும் இந்த ஆன் லைன் படிப்பில் சேருவதற்கு எந்தித மான அடிப்படை கல்வித்தகுதியும் தேவையில்லை. இதற்கான பாடங் களும், வகுப்புகளும் ஆன்லைன் சார்ந்ததாகவே இருக்கும்.

இதில் சேர விரும்புவோர் ஜனவரி 18 முதல் 25-ந் தேதி வரை https://onlinecourses.nptel.ac.in என்ற இணையதளத்தில் பெயரை பதிவுசெய்து கொள்ளுமாறு சென்னை ஐஐடி அறிவித்துள்ளது.